ராதாஸ்வாமி தயாள் கி தயா
ராதாஸ்வாமி ஸஹாய்

ISSN : 0974-827
RNI No. : 5804/61
Regd.No : Agra/154/2020-2022

தனிப்பிரதி ரூ. 2.00
வருஷசந்தா ரூ. 44.00
வெளிநாட்டு சந்தா ரூ.410.00

# தமிழ் பிரேம் பிரசாரக்
# (TAMIL PREM PRACHARAK)

Single Issue : Rs. 2/-
Annual (Inland) : Rs. 44/-
Annual (Foreign) : Rs. 410/

If the subscriber is not available at the address, please return this to Dayalbagh Press & Publications (Pvt) Ltd, RS Sabha Complex, Dayalbagh, Agra - 282005

**இறைவனை விட உயர்ந்த உண்மையுமில்லை**
**இறைவனை அறிதலை விட உயர்ந்த இன்பமுமில்லை**

**ராதாஸ்வாமி ஸகாப்தம் – 203**

**வருடம் – 87** **2020 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 07 ம் தேதி திங்கட்கிழமை** **இதழ் – 17**

**MONDAY, DECEMBER 07, 2020**

## பண்டாரா செய்திகள்
## (Bhandara News)

(DBH Week 33 Dt: 18.08.2020)

### பரம குரு ஹுஸுர் டாக்டர் எம்.பி. லால் ஸாஹப்
### (Param Guru Huzur Dr. M.B.Lal Sahab)

பரம குரு ஹுஸுர் டாக்டர் எம்.பி. லால் ஸாஹப் அவர்களது புனித பண்டாராவானது ஜுலை 5, 2020 ஞாயிற்றுக் கிழமையன்று தயாள்பாகிலும் மற்றும் இந்தியாவிற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பல்வேறு கிளைகளிலும் மிகுந்த பிரேமை மற்றும் பக்தியுடன் கொண்டாடப்பட்டது. பண்டாரா வாரமானது தயாள்பாகில் ஜுலை 3 லிருந்து 8, 2020 வரையில் கொண்டாடப்பட்டது. ஜுலை பண்டாராவிற்காக அனுமதிக்கப்பட்டிருந்த பிராந்தியத்தில், வடக்கு பீஹார் அதாவது பேகுஸராய்-ககரியா ஸத்ஸங்க மாவட்டங்கள், கிழக்கு-மேற்கு சம்ப்பரன், தர்பங்கா-ஸமஸ்திபுர்-மதுபனி, ஸரன்-ஸிவன்-கோபால்கஞ்ஜ், முஸ.ஃப்பர்புர்-சீத்தாமரி, வைஷாலி மற்றும் பட்னா-நளந்தா ஸத்ஸங்க மாவட்டங்களின் ஸத்ஸங்கிகள் மற்றும் நேப்பாள் தயாள்பாக் ராதாஸ்வாமி ஸத்ஸங்க அஸோஸியேஷன் ஆ.ஃப் ஏஷியா பசி.ஃபிக் (இதன் தலைநகரம் சிங்கப்பூரில் உள்ளது) மற்றும் தயாள்பாக் ராதாஸ்வாமி ஸத்ஸங்க அஸோஸியேஷன் ஆ.ஃப் நார்த் அமெரிக்கா, துபாய் கிளை, தோஹா, குவைத் ஸத்ஸங்க மையங்கள் மற்றும் உத்தரப் பிரதேசத்தின் ராதாஸ்வாமி ஸத்ஸங்க அஸோஸியேஷனின் கீழ் உள்ள ரூர்கியின் ஸத்ஸங்க மாவட்டங்கள், லக்னோ, வாரணாசி, அலஹாபாத் (அலஹாபாத் டி.எஸ்.ஏ வின் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் நீக்கப்படும்வரை) மற்றும் தயாள்பாக் வாசிகள் ஆகியோர் அடங்கியிருந்தனர். இருந்தாலும், நிலவிவரும் நாவல் கோவிட்-19 தொற்று நோயின் காரணமாகவும் அதனால் ஊரடங்கு விதிமுறைகளில் அரசாங்கத்தின் உத்தரவுகளைக் கட்டாயமாக அமல்படுத்துவதற்காகவும், தயாள்பாகிற்கு வெளியே உள்ள அனுமதிக்கப்பட்ட பிராந்தியத்தின் ஸத்ஸங்கிகள் தயாள்பாகிற்கு வர வேண்டாம் என்றும் வாராந்திர e-ஸத்ஸங்க கேஸ்கேடின் மூலமாக அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் ஸத்ஸங்கத்தின் ஆடியோ அல்லது வீடியோ முறையினைப் பயன்படுத்தி பண்டாராவை தத்தமது வீடுகளிலேயே கொண்டாடுமாறும் அறிவுறுத்தப்பட்டனர். வர்ச்சுவல் ரியலிட்டி மோடில் கூட ஸத்ஸங்கத்தில் ஆஜராகுபவர்கள் முகக் கவசங்களையும் ஹெல்மெட்டுகளையும் அணிவது கட்டாயம் என்று உத்தரவுகள் அளிக்கப்பட்டிருந்தன. தயாள்பாக் வாசிகளும் அனுமதிக்கப்பட்ட பிராந்தியங்களிலிருந்து வந்திருந்த உடல்உறுதி கொண்ட ஆண் ஸத்ஸங்கிகள் அல்லது ஜிஞ்ஞாஸுக்கள் மற்றும் விசேஷ அனுமதி பெற்றிருந்தவர்கள் ஆகியோர் இந்த பண்டாராவில் தயாள்பாகில் ஆஜராயினர். இவர்கள் செக்யூரிட்டி

கேம்ப் களில் தங்கியிருக்க அனுமதி அளிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் நெல் மாற்று நடவு ஸேவை மற்றும் அதனுடன் தொடர்புடைய விவசாய செயல்பாடுகளிலும் பங்கேற்க அனுமதிக்கப்பட்டிருந்தனர். விசேஷ அனுமதியுடன் வந்திருந்த வெளியூர் ஸத்ஸங்கிகள் முதலில் செக்யூரிட்டி கேம்ப்களில் அல்லது வயல்களில் ஸேவையில் ஆஜராவதற்கு முன்னாலேயே மெடிக்கல் செக்கப்பிற்காக ஸரன் ஆஷ்ரம ஹாஸ்பிடலின் மெடிக்கல் ஆ∴பீஸர் இன் சார்ஜ் இடம் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

பண்டாரா வாரத்தின் போது, காலை மற்றும் மாலை ஸத்ஸங்கங்கள் அன்றாடம் ஸத்ஸங்கக் கர்ம பூமியான விவசாய வயல்களில் வயல்வேலையின் போது நடைபெற்றன. நெல் மாற்று நடவு மற்றும் அதனைச் சார்ந்த செயல்பாடுகள் அடுத்தடுத்து வரும் இரண்டு ஷி∴ப்டுகளிலும் இவ்வாரத்தின் போது வயல்களில் நான்காம் எண் கிணறு, பஹாதூர்பூர், டெய்ரிபாக், நீர்ப்பாசனக் கால்வாய், ரை∴பிள் ரேஞ்ஜ் மற்றும் பைப்லைன் ஆகியவைகளுக்கு அருகிலுள்ள வயல்களில் நடைபெற்றன. நாவல் கோவிட்-19 தொற்று நோயின் காரணமாக பரிந்துரைக்கப்பட்டுள்ள எச்சரிக்கை நடவடிக்கைகளான ஹெல்மெட்டுகள் மற்றும் முகக்கவசம் மற்றும் கையுறைகளை அணிந்து கொள்ளுதல் மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றுதல் ஆகியவை வயல்வேலையின் போது அனைவராலும் கட்டாயமாகப் பின்பற்றப்பட்டன தயாள்பாக் வாசிகள் மற்றும் ஆக்ராவின் அனைத்து மூன்று கிளைகளும் மற்றும் தயாள்பாக் கல்வி நிலையங்களின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் விசேஷ அனுமதி பெற்றிருந்தவர்கள் ஆகியோர் அன்றாட டார்கெட்டுகளை அடைவதற்காக நெல் மாற்று நடவின் ஸேவையில் உற்சாகமாகப் பங்கேற்றனர். ஸுப்பர்மேன் ஸ்கீம் (∴பேஸ் 1 மற்றும் ∴பேஸ் 2)இன் குழந்தைகள் தமது பெற்றோர் அல்லது கார்டியன் அல்லது மேனேஜர்களுடனும், 80 வயதிற்கு மேற்பட்ட சகோதரிகள் மற்றும் 90 வயதிற்கு மேற்பட்ட சகோதரர்களும் கூட நெல் நடவு ஸேவையில் சுறுசுறுப்பாகப் பங்கேற்றனர். தயாள்பாகின் கௌஷாலாவிலிருந்து பரிசுத்தமான மற்றும் போஷாக்கு நிறைந்த அம்ரித் பேய என்னும் பாலானது வயல்வேலையின் போது அனைவருக்கும் மிகக் குறைந்த விலையிலோ அல்லது வயல்வேலைக்காகவோ வழங்கப்பட்டது. ஜுலை 2, 2020 அன்று மாலை வயல்வேலையின் போது பழத்தோட்டத்தில் ச்யவனப்ராஷின் விற்பனை நடைபெற்றது.

ஸுப்பர்மேன் ∴பேஸ் 1 மற்றும் ∴பேஸ் 2 இன் குழந்தைகள் அன்றாடம் முறையே மார்ச் பாஸ்ட்டிலும் ஹெல்த்கேர் உடற்பயிற்சியிலும் பங்கேற்றனர். பண்டாரா வாரத்தின் போது தயாள்பாகின் சகோதரிகள் மற்றும் சகோதரர்களின் தற்காப்பு மற்றும் ஹெல்த்கேர் உடற்பயிற்சி ஆகியவை அன்றாடம் உடற்பயிற்சித் திடலில் நடைபெற்றன.

**ஜுலை 5, 2020** புனித பண்டாரா தினமாகியது. ஆரதி ஸத்ஸங்கமானது காலை 3.45 மணிக்கு நான்காம் எண் கிணற்றருகே உள்ள வயல்களில் காலை வயல்வேலையின் போது ஆரம்பமாகியது. மங்களாசரணத்தின் புனித நாதங்கள் அதிகாலைக் காற்றில் நட்சத்திரங்களின் போர்வைக்குக் கீழே இருந்த திறந்த வயல்கள் முழுவதும் மிதந்து வந்தன. இந்த அமிர்தமயமான வேளையில் ப்ரீதமரது பாத கமலங்களில் ஸேவை செய்வதில் ஆனந்தத்துடன் அனைவரும் ஈடுபட்டிருந்தனர். அதன் பிறகு ஆண்கள் மற்றும் பெண்களின் ஷப்தங்கள் பாடும் குழுவினரால் முறையே ஒவ்வொரு ஷப்தம் பாடப்பட்டது:

ஆண்களின் குழுவினர்:

அப்னே ஸ்வாமீ கீ மை கரத ஆரதீ

(ஸார் பசன், வசனம் 6, ஷப்தம் 12, அடிகள் 1-6)

பெண்களின் குழுவினர்:

அப்னே ஸ்வாமீ கீ மை கரத ஆரதீ

(ஸார் பசன், வசனம் 6, ஷப்தம் 12, அடிகள் 7-12)

அதன் பிறகு, ஹிந்தி பிரேம் பிரச்சாரக்கின் 6.7.2020 தேதியிடப்பட்ட பண்டாரா விசேஷ இதழிலிருந்து பரம குரு ஹுஸுர் டாக்டர் எம்.பி. லால் ஸாஹப் அவர்களது ஒரு வசனம் வாசிக்கப்பட்டது. இதன் பிறகு அனைவராலும் சேர்ந்து

ஸரன தேரீ பிரார்த்தனையும் பினதியும் பாடப்பட்டன. அதன் பிறகு வயல்வேலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்க, வாலன்டியர்கள் அங்கு கூடியிருந்த அனைவருக்கும் முர்முரா (பொரி) மற்றும் இலாய்ச்சிதானா வின் பிரசாத பாக்கெட்டுகளை விநியோகித்தனர்.

பண்டாராவானது மாலை வயல்வேலையின் போது நான்காம் எண் கிணற்றருகிலுள்ள வயல்களில் நடைபெறுவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. மாலை ஸத்ஸங்கம் மாலை சுமார் 3.45 மணிக்கு காருண்ய ஹுஸூர் அவர்கள் வந்தருளியதும் நடைபெற்றது. ஸத்ஸங்கத்தின் போது ஆண்கள் மற்றும் பெண்களின் ஷப்தங்கள் பாடும் குழுவினரால் பின்வரும் ஷப்தங்கள் பாடப்பட்டன:

ஆண்கள்: தயா கே ஸிந்த ஸத்தகுரு

(பிரேம் பானி பாகம் 3, வசனம் 14(6), ஷப்தம் 2)

பெண்கள்: ஸுன ஸுன ரஹ்யா ந ஜாய்

(பிரேம் பிலாஸ், ஷப்தம் 117)

அதன் பிறகு 6.7.2020 தேதியிடப்பட்ட ஹிந்தி பிரேம் பிரச்சாரக்கின் பண்டாரா விசேஷ இதழிலிருந்து பரம குரு ஹுஸூர் டாக்டர் எம்.பி. லால் ஸாஹப் அவர்களது வசனம் வாசிக்கப்பட்டது. அனைவராலும் சேர்ந்து பாடப்பட்ட பினதியுடன் ஸத்ஸங்கம் நிறைவுற்றது. அதன் பிறகு ஒரு அறிவிப்பு செய்யப்பட்டது. அதாவது சகோதரர்களும் சகோதரிகளும் தொடர்ந்து வயல்வேலை செய்து கொண்டிருக்க வேண்டும் என்றும் நெல் மாற்று நடவு ஸேவையின் போது அவர்களுக்கு நேரம் கிடைக்கும் போது ப்ரீதி போஜனத்தை உட்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. ஸத்ஸங்க கர்ம பூமியில் பணி செய்து கொண்டிருந்தவர்கள் இவ்வாறாக சுயநலமற்ற ஸேவை செய்து கொண்டிருக்கும் போது ப்ரீதி போஜனத்தை உட்கொள்ளும் விசேஷ அருளைப் பெற்றனர். இது ராதாஸ்வாமி மதத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். புனித நூல்களின் விற்பனையானது ஸபா அலுவலகத்தின் கட்டிடங்களில் உள்ள பப்ளிகேஷன் டிபார்ட்மென்டில் நடைபெற்றது.

**ஜூலை 6, 2020 –** காலை ஸத்ஸங்கம் மற்றும் வயல்வேலைக்குப் பிறகு, முற்பகல் 11.00 மணியிலிருந்து தேஜ்புஞ்ஜில் உபதேசம் வழங்கப்பட்டது. தயாள்பாகின் உபதேசம் பெற்ற சகோதரர்களும் சகோதரிகளும் மற்றும் இந்த பண்டாராவில் ஆஜராவதற்காக விசேஷ அனுமதி பெற்றிருந்த வெளியிடங்களின் யாத்திரிகர்களில் உபதேசம் பெற்ற சகோதரர்களும் சகோதரிகளும் காலை 10.00 மணியிலிருந்து பிற்பகல் 1.00 மணி வரையில் கரஸ்பான்டென்ஸ் ஹாலில் ஹுஸூர் ராதாஸ்வாமி தயாளரது பாத கமலங்களில் காணிக்கை செலுத்தினர். தயாள்பாகிற்கு வரமுடியாத அனுமதிக்கப்பட்ட பிராந்தியங்களின் இதர உபதேசம் பெற்றிருந்த ஸத்ஸங்கிகள் (வெளிநாட்டுப் பிராந்தியத்தினரைத் தவிர) விதிக்கப்பட்டிருந்த கிளையின் வங்கி 'NEFT/RTGS' இன் மூலமாக காணிக்கையை ஆன்லைனில் செலுத்தினர். கட்டுப்பாடுகளின் காரணமாக தயாள்பாகில் பண்டாராவில் ஆஜராக முடியாதிருந்த வெளி நாடுகளின் பிராந்தியங்களின் உபதேசம் பெற்றிருந்த ஸத்ஸங்கிகள் தத்தமது பிராந்திய அஸோஸியேஷன்களின் வங்கிக் கணக்கில் ஆன்லைனில் காணிக்கைத் தொகையினைச் செலுத்தினர். 2020 – 2021 இன் காணிக்கைச் சுற்றிற்கான காணிக்கைத் தொகையின் வரையறையானது பின்வருமாறு இருந்தது:

**இந்தியாவிலுள்ள ஸத்ஸங்கக் கிளைகளில்** பதிவு செய்து கொண்டுள்ள உபதேசம் பெற்ற ஸத்ஸங்கிகள் அதிகபட்சத் தொகையாக ரூபாய் 2000/- குறைந்தபட்சத் தொகையாக ரூபாய் 10/- மற்றும் அதன் மடங்குத் தொகைகளையும் செலுத்தலாம்.

**வெளிநாடுகளிலுள்ள ஸத்ஸங்கக் கிளைகளில்** பதிவு செய்த கொண்டுள்ள உபதேசம் பெற்ற ஸத்ஸங்கிகள் அதிகபட்சத் தொகையாக ரூபாய் 5000/- குறைந்தபட்சத் தொகையாக ரூபாய் 100/- மற்றும் அதன் மடங்குத் தொகைகளையும் செலுத்தலாம்.

கோவிட் 19 தொற்று நோயின் காரணமாக பரிந்துரைக்கப்பட்டுள்ள எச்சரிக்கை நடவடிக்கைகளைக் கட்டாயமாகப் பின்பற்றி தயாள்பாகில் ஸத்ஸங்கிகள் காணிக்கைகளைச் செலுத்தினர். மாலை

ஸத்ஸங்கமானது நான்காம் எண் கிணற்றிற்கு அருகிலுள்ள வயல்களில் நடைபெற்றது.

**ஜுலை 7, 2020 –** காலை மற்றும் மாலை ஸத்ஸங்கங்கள் காலை மற்றும் மாலை சுமார் 3.45 மணிக்கு வயல்வேலை ஸேவையின் போது நடைபெற்றன. அடுத்தடுத்து வரும் இரண்டு ஷி.ீ.ப்டுகளிலும் சகோதரர்களும் சகோதரிகளும் நெல் நாற்று நடவு ஸேவையில் பெரும் எண்ணிக்கைகளில் பங்கேற்றனர்.

**ஜுலை 8, 2020 –** காலை ஸத்ஸங்கமானது காலை 3.45 மணிக்கு வயல்வேலையின் போது நடைபெற்றது. மாலை ஸத்ஸங்கமானது மாலை 3.45 மணிக்கு வயல்வேலையின் போது நடைபெற்றது. காருண்யம் மிக்க ஹுஸுர் அவர்களின் உத்தரவின் படி வயல்வேலையின் போது ஜோனல் ஸத்ஸங்கமும் மாலை ஸத்ஸங்கத்திற்கு சிறிது நேரத்திற்குப் பிறகு நடைபெற்றது. ஜோனல் ஷப்தங்கள் பாடுதலின் போது பின்வரும் ஷப்தங்கள் பாடப்பட்டன:

ஆண்கள்: தில் கா ஹுஜரா ஸா.ீ.ப் கர்

(ஸந்த் பானி ஸங்கிரஹ் - 2, துளசி ஸாஹப், ஷப்தம் 30)

பெண்கள்: தேக்கோ ஸப ஜக ஜாத்த பஹா

(ஸார் பசன், வசனம் 15, ஷப்தம் 10)

இளைஞர்கள்:ஸுன ரீ ஸக்கீ மேரே ப்யாரே ராதாஸ்வாமீ

(பிரேம் பாணி, பாகம் 2, வசனம் 21, ஷப்தம் 4)

குழந்தைகள்: மேஹர ஹோய கோயீ ப்ரேமீ ஜானே

(பிரேம் பிலாஸ், ஷப்தம் 97)

ஜோனல் ஷப்தங்களுக்குப் பிறகு, மேலும் இரண்டு ஷப்தங்கள் பாடப்பட்டன:

பரம குரு ஹுஸுர் லால் ஸாஹப் அவர்களது குடும்பத்தினர்:

குரு மோஹி லேவ ஆஜ் அப்னாயீ

(பிரேம் பிலாஸ், ஷப்தம் 30)

காருண்ய ஹுஸுர் அவர்களது குடும்ப அங்கத்தினர்:

ஜப லக ஜீவ ஜக ரஸ சஹே

(பிரேம் பிலாஸ், ஷப்தம் 133)

அதன் பிறகு, ஸத்ஸங்கக் கர்மபூமியில் இருந்த அனைவருக்கும் இலாய்ச்சிதானா பிரசாதம் விநியோகிக்கப்பட்டது.

பண்டாரா வாரத்தின் போது, பண்டாரா தினத்தன்று அதாவது ஜுலை 5, 2020 ஞாயிற்றுக் கிழமையன்று நடைபெற்ற e-ஸத்ஸங்கத்துடன், ஆக்ரா 282005, தயாள்பாகில் நேரடியாக இருக்க முடியாதவர்களுக்காக 'ஸுப்பர்வைஸ்டு வர்ச்சுவல் மோடில்' ஆரதி மற்றும் பண்டாராவின் நேரடி ஒளிபரப்பையும் சேர்த்து, வாராந்திர கேஸ்கேடில் காலை மற்றும் மாலை ஸத்ஸங்கங்களின் நேரடி ஆடியோ அல்லது வீடியோ ஒளிபரப்பானது நியமமாகச் செய்யப்பட்டது.

இவ்வாறாக, 'தயாளரின் திருத்தோட்டத்தில்' நடைபெற்ற பண்டாராக் கொண்டாட்டங்கள் ஒரு வெற்றிகரமான நிறைவுக்கு வந்தன. இவ்வனைத்து நிகழ்வுகளும் ஊரடங்கிற்குப் பின் விதிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப நடத்தப்பட்டன. பண்டாரா வாரம் முழுவதும் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள், இளைஞர் மற்றும் வயோதிகர்கள் ஆகியோர் ஸத்ஸங்கத்தின் கர்மபூமியில் விரும்பப்பட்ட டார்கெட்டை அதாவது இலக்கை அடைவதற்காகவும் மற்றும் ஜுலை 3 ஆம் தேதியன்று ஆரம்பிக்கப்பட்ட நெல்நாற்று நடவு ஸேவையை நிறைவு செய்வதற்காகவும் அயராது ஹுஸுர் ராதாஸ்வாமி தயாளரது எளிய ஸேவகர்களாக உழைத்தனர். இப்பணிகள் ஜுலை 8, 2020 அன்று ஹுஸுர் ராதாஸ்வாமி தயாளரது எல்லையற்ற அருளினால் திட்டமிட்ட படி வெற்றிகரமாக நிறைவுற்றன. அனைத்து ஸத்ஸங்கிகளும் பரம பிதாவின் பாத கமலங்களில்

## தயாள்பாக் செய்திகள்
## (Dayalbagh News)

**(ஆகஸ்ட் 19 - 25 , 2020)**

**(DBH Week 38 Dt: 22.09.2020)**

2020 ஆகஸ்ட் 24 ஆம் தேதி பரம புருஷ பூரண தனி ஹுஸுர் ஸ்வாமிஜி மஹாராஜர் அவர்களின் புனிதமான பிறந்த நாளை முன்னிட்டு ஸத்ஸங்க ஹாலும் அதன் வளாகமும் ஒளி விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. காலை ஸத்ஸங்கத்தில் மௌஜ் பிரகாரம் ஒரு ஷப்தம் எடுத்து, ஆண்கள் குழுவினரால் பாடப்பட்டது.

குருமுக் ப்யாரா குரு அதாரா! ஆரத தாரா ரீ

(ஸார் பசன், வசனம் 6 ஷப்தம் 21)

பொதுக் குழுவின் சகோதரர்களும் சகோதரிகளும் அடுத்தடுத்து வரும் இரண்டு ஷி∴ப்டுகளிலும் வயல்வேலை ஸேவையில் பங்கேற்றனர். அவர்கள் அளிக்கப்பட்டிருந்த திட்டத்திற்கேற்ப டானரி மற்றும் லால் ஜமீன் ஆகியவற்றிற்கு அருகிலுள்ள வயல்களில் பணியாற்றினர். நாவல் கோவிட் 19 தொற்று நோயின் காரணமாக பரிந்துரைக்கப் பட்டுள்ள எச்சரிக்கை நடவடிக்கைகள் அனைவராலும் வயல்வேலையின் போது கட்டாயமாகப் பின்பற்றப்பட்டன. ஸூப்பர்மேன் எவல்யூஷனரி ஸ்கீமில் பதிவு செய்து கொண்டுள்ள குழந்தைகள் தமது பெற்றோரில் ஒருவர் அல்லது கார்டியன் அல்லது மேனேஜர் ஆகியோருடன் நியமமாக வயல்களில் ஆஜராயினர். பரிசுத்தமான மற்றும் போஷாக்கு நிறைந்த “அம்ரித் பேய“ என்ற சூடான பால் வயல்வேலையின் போது குறைவான கட்டணத்திற்கோ அல்லது வயல்வேலைக்காகவோ நியமமாக அனைவருக்கும் வழங்கப்பட்டது.

தயாள்பாகின் சகோதர சகோதரிகளின் நியமமான உடற்பயிற்சி மற்றும் தற்காப்பு மற்றும் ஹெல்த்கேர் உடற்பயிற்சி ஆகியவை அன்றாடம் உடற்பயிற்சித் திடலில் காலை ஸத்ஸங்கத்திற்குப் முன் நடைபெற்றன. ஸூப்பர்மேன் ஸ்கீமின் குழந்தைகள் தமது பெற்றோரில் ஒருவர் அல்லது கார்டியன் அல்லது மேனேஜர் ஆகியோருடன் இதில் ஆஜராயினர். மாணவர் ஸத்ஸங்கமானது ஆகஸ்ட் 23, 2020 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது. மாணவர்களால் காலை ஸத்ஸங்கத்தின் போது இரண்டு ஷப்தங்களும், ஸத்ஸங்கத்திற்குப் பிறகு இரண்டு ஷப்தங்களும் பாடப்பட்டன. ஸூப்பர்மேன் ஸ்கீமின் குழந்தைகள் தமது பெற்றோரில் ஒருவர் அல்லது கார்டியன் அல்லது மேனேஜர் ஆகியோருடன் இதில் ஆஜராயினர். தயாள்பாகின் வீராங்கனைகளின் தற்காப்பு அல்லது ஹெல்த்கேர் உடற்பயிற்சியானது ஞாயிற்றுக் கிழமையன்று வயல்வேலையின் போது நடைபெற்றது. ஸூப்பர்மேன் ஸ்கீம் ∴பேஸ் 2 வின் குழந்தைகளின் ஹெல்த்கேர் உடற் பயிற்சியானது அவர்களது தாய்மார்கள் அல்லது ஆசிரியைகளுடனும் ∴பேஸ் 1 இன் குழந்தைகளின் மார்ச் பாஸ்ட்டானது அவர்களது பெற்றோரில் ஒருவர் அல்லது கார்டியன் அல்லது மேனேஜர் ஆகியோருடனும் அன்றாடம் வயல்வேலையின் போது நடைபெற்றது.

வாராந்திர e-ஸத்ஸங்க கேஸ்கேடில் காலை மற்றும் மாலை ஸத்ஸங்கங்களின் நேரடி ஆடியோ அல்லது வீடியோ ஒளிபரப்பானது, ஞாயிற்றுக் கிழமை e-ஸத்ஸங்கம், மாணவர் ஸத்ஸங்கம், குளோபல் மார்ச் பாஸ்ட் மற்றும் தற்காப்பு அல்லது ஹெல்த்கேர் உடற்பயிற்சிகள் ஆகியவைகளுடன் ஆக்ரா 282005 தயாள்பாகில் நேரடியாக இல்லாதவர்களுக்காக “ஸூப்பர்வைஸ்டு” வர்ச்சுவல் ரியலிட்டி மோடில் நியமமாக வழங்கப்பட்டது.

25.08.2020 அன்று பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலைகள் முறையே 31 டிகிரி மற்றும் 26 டிகிரி செல்ஷியஸாக இருந்தது.

# பண்டாரா செய்திகள்

# (BHANDARA NEWS)

[DBH Week 37, Dated: 15.09.2020]

## பரம புருஷ பூரன தனி ஹுஸூர் ஸ்வாமிஜி மஹாராஜா்

## (Param Purush Puran Dhani Huzur Soamiji Maharaj)

பரம புருஷ பூரன தனி ஹுஸூர் ஸ்வாமிஜி மஹாராஜா் அவர்களது புனித பண்டாராவானது ஆகஸ்ட் 12, 2020 புதன்கிழமையன்று தயாள்பாகிலும் மற்றும் இந்தியா மற்றும் வெளிநாடுகளிலும் உள்ள பல்வேறு கிளைகளிலும் மிகுந்த பிரேமை மற்றும் பக்தியுடன் கொண்டாடப்பட்டது. பண்டாரா வாரமானது தயாள்பாகில் ஆகஸ்ட் 10ம் தேதியிலிருந்து 14ம் தேதி வரையில் கொண்டாடப்பட்டது. தமிழ் ராதாஸ்வாமி ஸத்ஸங்க அஸோஸியேஷன், ஆந்திரா ராதாஸ்வாமி ஸத்ஸங்க அஸோஸியேஷன், மேற்கு வங்காளம், ஓரிஸா, கிழக்கத்திய மாநிலங்கள், அஸ்ஸாம் மற்றும் யு.கே. மேற்கத்திய ஐரோப்பிய பிராந்தியம் ஆகியவை அனுமதிக்கப்பட்ட பிராந்தியங்களாகும். ஆனால் கோவிட்-19 தொற்று நோயின் காரணமாக தேசம் முழுவதிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டத்தின் காரணமாக வெளியூர் ஸத்ஸங்கிகள் இந்த பண்டாராவில் தயாள்பாக் வருவதற்கு அனுமதி

அளிக்கப்படவில்லை. எனவே அவர்கள் பண்டாராவை ஆடியோ ஒலிபரப்பிலும், அனுமதிக்கப்பட்ட சிறு குழுக்கள் வீடியோ ஒளிபரப்பிலும் கொண்டாடுவதற்கு அறிவுறுத்தப்பட்டனர். சமூக பரவலை கருத்தில் கொண்டு பாதுகாப்பு நெறிமுறைகளான முகக்கவசம், ஹெல்மெட் அணிவது மற்றும் சமூக இடைவெளியை கடைபிடிப்பது ஆகியவற்றை நேரடி ஒளிபரப்பின் பண்டாராவில் பங்கேற்பவர்களும் கண்டிப்பாக கடைப்பிடித்தனர். தயாள்பாக்வாசிகளும், அனுமதிக்கப்பட்ட பிராந்தியங்களின் ஆற்றல் வாய்ந்த ஆண் ஸத்ஸங்கிகளும், ஜிஞ்ஞாஸுக்களும் மற்றும் செக்யூரிட்டி கேம்பில் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டவர்களும், வயல் வேலைகளில் பங்கேற்பவர்களும், சிறப்பு அனுமதி பெற்றவர்களும் தயாள்பாகில் நடைபெற்ற பண்டாரா நிகழ்ச்சிகளில் ஆஜராயினர். அனுமதிக்கப்பட்ட பிராந்தியங்களில் சிறப்பு அனுமதி பெற்ற யாத்திரிகர்களுக்கு செக்யூரிட்டி கேம்பின் பணி மற்றும் வயல் ஸேவையில் தம் வருகையை தெரிவிப்பதற்கு முன் முதலில் ஸரன் ஆசிரம மருத்துவமனையின் மருத்துவ பொறுப்பு அதிகாரியிடம் மருத்துவ பரிசோதனைக்காக ஆஜராக அறிவுறுத்தப்பட்டனர்.

பண்டாரா வாரத்தின் போது காலை மற்றும் மாலை ஸத்ஸங்கங்கள் தினசரி ஸத்ஸங்க கர்ம பூமியில் வயல்வேலையின் போது காலை 3.45 மணிக்கும் மாலை 3.45 மணிக்கும் நடைபெற்றன. இந்த பண்டாரா வாரத்தின் போது டானரிக்கு அருகிலுள்ள வயல்களிலும் வித்யூத் நகர் மூலிகை தோட்டத்திலும் இரண்டு ஷி∴ப்டுகளிலும் வயல் வேலை ஸேவையானது நடைபெற்றது. வயல் வேலையின் போது பரிந்துரைக்கப்பட்ட எச்சரிக்கை நடவடிக்கைகளான ஹெல்மெட், முகக்கவசம், கையுறை அணிவது மற்றும் சமூக இடைவெளி பின்பற்றுவது ஆகியவை அனைவராலும் கட்டாயமாகப் பின்பற்றப்பட்டன. ஸுப்பர்மேன் எவல்யூஷனரி ஸ்கீமில் பதிவு செய்து கொண்டுள்ள குழந்தைகள் தமது பெற்றோரில் ஒருவர் அல்லது கார்டியன் அல்லது மேனேஜருடன் வயல்களில் நியமமாக ஆஜராயினர். தயாள்பாக் கௌஷாலாவிலிருந்து பரிசுத்தமான மற்றும் போஷக்கு நிறைந்த ‘அம்ரித் பேய’ என்னும் சூடான பால் வயல்வேலையில் ஆஜராகிய அனைவருக்கும் நியமமாக விநியோகிக்கப்பட்டது. ஸுப்பர் மேன் ∴பேஸ் 1 மற்றும் ∴பேஸ் 2 குழந்தைகள் தினசரி முறையே மார்ச் பாஸ்டிலும், ஹெல்த்கேர் பி.டி.யிலும் பங்கேற்றனர். தயாள்பாக்கைச் சேர்ந்த சகோதர, சகோதரிகள் வழக்கமான உடற்பயிற்சி தற்காப்பு மற்றும் ஹெல்த்கேர் உடற்பயிற்சியில் தினந்தோறும் காலை ஸத்ஸங்கத்திற்கு முன்னர் பற்கேற்றனர்.

**ஆகஸ்ட் 10, 2020** :- காலை ஸத்ஸங்கம் மற்றும் வயல்வேலை ஸேவைக்குப் பிறகு உபதேசம் பெற்ற சகோதரிகள் காலை 9.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணிவரை பாவன் ஸ்மிரித்யாலயா புனித மற்றும் பொதுப் பகுதிகளுக்குச் சென்று மரியாதை செலுத்தினர். சகோதரர்கள் தயாள்பாக் வளர்ச்சியைப் பற்றிய நிலையான பொருட்காட்சியைப் பிற்பகல் 1.00 மணியிலிருந்து 3.00 மணி வரையில் சென்று பார்த்தனர். மாலை ஸத்ஸங்கமானது டானரிக்கு அருகிலுள்ள வயல்வெளியில் வயல் வேலையின்போது மாலை 3.45 மணிக்கு நடைபெற்றது.

**ஆகஸ்ட் 11, 2020**:- காலை ஸத்ஸங்கமானது டானரிக்கு அருகிலுள்ள வயல்களில் காலை வயல்வேலையோடு நடைபெற்றது. ஸபா கூட்டமானது காலை ஸத்ஸங்கத்திற்குப் பிறகு வயலில் நடைபெற்றது. ச்யவன்பராஷ் விற்பனையானது ஸபா உறுப்பினர்களுக்கும், அனுமதிக்கப்பட்ட பிராந்தியங்களின் யாத்திரிகர்கள் மற்றும் சிறப்பு அனுமதி பெற்று தயாள்பாகில் பண்டாராவில் ஆஜரானவர்களுக்கும் நடைபெற்றது. காலை ஸத்ஸங்கம் மற்றும் வயல்வேலை ஸேவைக்குப் பிறகு அனுமதிக்கப்பட்ட பிராந்தியத்தின் உபதேசம் பெற்ற சகோதரர்கள் காலை 9.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரையில் பாவன் ஸ்மிரித்யாலயாவின் புனித மற்றும் பொதுப் பகுதிகளுக்குச் சென்று மரியாதை செலுத்தினர். சகோதரிகள் தயாள்பாகின் வளர்ச்சியைப் பற்றிய நிலையான பொருட்காட்சியை பிற்பகல் 1.00 மணியிலிருந்து 3.00 மணிவரையில் சென்று பார்வையிட்டனர். மாலை ஸத்ஸங்கமானது டானரிக்கு அருகிலுள்ள வயல்களில் வயல் வேலையின் போது நடைபெற்றது.

**ஆகஸ்ட் 12, 2020**:- அன்று மிகவும் புனித பண்டாரா தினமாகியது. ஸத்ஸங்க ஹாலானது மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு, இத்தருணத்திற்காக ஒளியூட்டப்பட்டிருந்தது. காலை ஸத்ஸங்கத்திற்கு முன்பு காலை 3.30 மணிக்கு, ஒரு சிறிய உடற்பயிற்சியானது வழக்கமாக உடற்பயிற்சியில் பங்கேற்பவர்களால் உடற்பயிற்சி மைதானத்தில் நடைபெற்றது. எல்லா உடற்பயிற்சியாளர்களும், உடற்பயிற்சிக்கு பிறகு அங்கேயே இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அதே வேளையில் காலை 3.45 மணிக்கு ஆரதி ஸத்ஸங்கமானது ஆரம்பிக்கப்பட்டது. காருண்ய ஹுஸுர்

அவர்கள் உடற்பயிற்சி மைதானத்திற்கு வந்தருளி தமது இருக்கையில் அமர்ந்தார்கள். ஆரதி ஸத்ஸங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே வேளையிலேயே, ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்த காருண்ய ஹுஸுர் அவர்களின் முன்னால் மறுபடியும் உடற்பயிற்சி செய்யப்பட்டது.

ஆரதி ஸத்ஸங்கத்தில் மங்களா சரணத்திற்குப் பிறகு ஆண்கள் மற்றும் பெண்களின் ஷப்தம் பாடும் குழுவினரால் முறையே ஒவ்வொரு ஷப்தம் பாடப்பட்டது.

ஆண்கள்: ராதாஸ்வாமி தயா ப்ரேம கட ஆயா

(ஸார் பசன் வசனம் 6, ஷப்தம் 16 அடிகள் 1 முதல் 5 வரை)

பெண்கள்: ராதாஸ்வாமி தயா ப்ரேம கட ஆயா

(ஸார் பசன் வசனம் 6, ஷப்தம் 16 அடிகள் 6 முதல் 9 வரை)

அதன் பிறகு 10.08.2020 தேதியிடப்பட்ட ஹிந்தி பிரேம் பிராச்சாரக்கின் பண்டாரா விசேஷ இதழிலிருந்து ஒரு வசனம் வாசிக்கப்பட்டது. ஆரதி ஸத்ஸங்கத்திற்குப் பிறகு பரம பூஜ்ய காருண்ய ஹுஸுர் அவர்களுக்கு பி.டி. பிரசாதமும், ஆரதி பிரசாதமும் வழங்கப்பட்டது.

வாலண்டியர்கள் இரண்டு பிரசாதங்களையும் வழக்கமான உடற்பயிற்சியாளர்களுக்கு விநியோகித்தனர். மேலும் ஆரதி பிரசாதத்தை அங்கு கூடியிருந்த அனைவருக்கும் விநியோகித்தனர். காருண்ய ஹுஸுர் அவர்கள் உடற்பயிற்சி மைதானத்திலிருந்து டானரிக்கு அருகிலுள்ள வயல்களுக்குச் சென்றார்கள். மற்ற அனைவரும் அவரை பின்பற்றிச் சென்றார்கள். அது ஒரு முகில் நிறைந்த காலையாக இருந்தது. கூடவே லேசான மழை தூறலும் ஆரம்பித்தது. எனினும் அனைவரும் ஸத்ஸங்க கர்ம பூமியில் தொடர்ந்து அமைதியாக வேலை செய்தார்கள். மழையானது இரக்கமே உருவான ஸத்குருவின் தாமரைத் திருவடிகளில் செய்யும் ஸேவை மேலும் அவருடைய கருணை மற்றும் தயவின் பொழிவில் நனைவதிலிருந்தும் தடையை ஏற்படுத்தவில்லை. தூறலானது கனமான மழையாக மாறிய பொழுது அனைவரும் பாதுகாப்பாக மரத்தடியிலும், அருகிலுள்ள கட்டிடங்களிலும் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டார்கள். மழையின் வேகம் குறைந்து நின்றுவிட்ட பொழுது அனைவரும் வயலிலிருந்து ஸத்ஸங்க ஹாலுக்குச் செல்லுமாறு அறிவிக்கப்பட்டார்கள். காருண்ய ஹுஸுர் அவர்கள் ஸத்ஸங்க ஹாலுக்கு வந்தருளி தமது இருக்கையில் அமர்ந்தார்கள். அதன்பிறகு ஸத்ஸங்க ஹாலில் கொண்டைக்கடலை சுத்தம் செய்யும் பணி மற்றும் தரம் பிரிக்கும் பணியும் தரப்பட்டது. எல்லோரும் சிங்காசனத்தில் இருந்த அன்பிற்குரிய ஸந்த் ஸத்குருவின் மிக அருகில் அமர்ந்து திருவருளை பெறக்கூடிய வாய்ப்பினை பெற்றார்கள். வெகு நாட்களுக்குப் பிறகு அந்த புனித நன்னாளில் சிங்காசனத்தில் அவருடய தரிசனத்தை இதயத்தில் பெற்று மனநிறைவு அடைந்தார்கள்.

பண்டாராவிற்காக காருண்ய ஹுஸுர் அவர்கள் வித்யூத் நகர் மூலிகை தோட்டத்தில் முற்பகல் 3.00 மணிக்கு வந்தருளினார்கள். அங்கு பரம புருஷ பூரன தனி ஹுஸுர் ஸ்வாமிஜி மஹாராஜர் மற்றும் பரம குரு ஹுஸுர் டாக்டர். எம்.பி.லால் ஸாஹப் ஆகியோரது புனித புகைப்படங்கள் மாலை அணிவிக்கப்பட்டு காருண்ய ஹுஸுர் அவர்களது நாற்காலிக்கு முன்பு ஒரு அலங்கரிக்கப்பட்ட குடையின் கீழ் அமைக்கப்பட்ட மேடையின் மீது வைக்கப்பட்டிருந்தன. ஸத்ஸங்கம் ஆரம்பிப்பதற்கு முன்னர், மாலை ஸத்ஸங்கத்திற்கு முன் மூன்று ஷப்தங்கள் பாடுமாறு அறிவிக்கப்பட்டது. ஒன்று மதிப்பிற்குரிய ராணி ஸாஹிபா அவர்களாலும் மற்றொன்று புனித குடும்ப அங்கத்தினர்களாலும் மூன்றாவது சிறப்பு கவ்வாலி குழுவினராலும் பாடப்பட்டது. மதிப்பிற்குரிய ராணி ஸாஹிபா அவர்கள் ஷப்தத்திற்குப் பிறகு ப்ரீதி போஜ் எடுத்துக்கொள்ளுமாறு எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டது. மாலை ஸத்ஸங்கம் 3.45 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. மங்களா சரணத்திற்குப் பிறகு கீழ்க்கண்ட ஷப்தங்கள் பெண்களின் ஷப்தம் பாடும் குழுவினரால் பாடப்பட்டது.

“ஆஜ் கடி அதி பாவன பாவன்”

(ஸார்பசன் வசனம் 28 ஷப்தம 4)

“ராதாஸ்வாமி குரு தாதார்”

(ப்ரேம் பிலாஸ் ஷப்தம் 25)

ஒரு வசனம் வாசிக்கப்பட்ட பிறகு, எல்லோரும். ஒன்று கூடி பினதி பாடியதோடு மாலை ஸத்ஸங்கம் நிறைவுபெற்றது. பிறகு காருண்ய ஹுஸுர் அவர்களின் உத்தரவின்படி ஆண்கள் மற்றும் பெண்கள் ஷப்தம் பாடும் குழுவினர் இணைந்து ஒரு ஷப்தம் பாடினார்கள். மதிப்பிற்குரிய ராணி ஸாஹிபா அவர்களின் ஷப்தமும், ப்ரீதி போஜனமும் முடிந்த பிறகு இது நடைபெற்றது. காருண்ய ஹுஸுர் அவர்கள் புனித உணவின் முதல் கவளத்தை உட்கொண்ட பின்னர் கூடியிருந்த பக்தர்கள் அப்புனித விருந்தில் கலந்து கொண்டார்கள். பண்டாராவில் புனித குடும்பத்தின் அங்கத்தினர்களால் ஒரு ஷப்தமும், பிரேமி சகோதரி சந்தோஷ் ஜோஷி மற்றும் குழுவினரால் ஒரு கவ்வாலியும், சிறப்பு கவ்வாலி குழுவினரால் பன்னிகலி கவ்வாலியும் பாடப்பட்டன. பின்வரும் ஷப்தங்கள் அந்தத் தருணத்தில் பாடப்பட்டன. ஷப்தங்கள் பாடும் ஆண்கள் மற்றும் பெண்கள் குழுவினரால் (இணைந்த ஷப்தம்)

“ஆரத ஆகே ராதாஸ்வாமி கே கீஜே“

(ஸார் பசன் , வசனம் 30, ஷப்தம் 25)

மதிப்பிற்குரிய ராணி ஸாஹிபா அவர்கள் மற்றும் குழுவினர்

“கௌன கரே ஆரத ஸதகுரு கீ”

(ஸார் பசன், வசனம் 28 ஷப்தம் 6)

புனித குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர்கள்

“அபனே ஸ்வாமி கி மைம் கரத ஆரதி”

(ஸார் பசன் வசனம் 6 ஷப்தம் 12)

பிரேமி சகோதரி சந்தோஷ் ஜோஷி மற்றும் குழுவினர்

“பதாயீ ஹை பதாயீ ஹை, பதாயீ ஹை, பதாயீ

(சுயமாக இயற்றிய கவ்வாலி பாடல்)

சிறப்பு கவ்வாலி குழுவினர்

“ச்சோடா நிஜ கர் ஆயே, பவ ஜல லாயே நாம ஜஹாஜ்

ஸந்த்தோங் கே ஸிரதாஜ், ப்யாரே (ஹமாரே) ஸ்வாமிஜி மஹராஜ்”

(சுயமாக இயற்றிய கவ்வாலி பாடல்)

ப்ரீதி போஜனுக்குப் பிறகு சிறிது நேரம் வயல் வேலை நடைபெற்றது.

**ஆகஸ்ட் 13, 2020** – மழையின் காரணமாக காலை ஸத்ஸங்கம் மற்றும் ஸேவை ஸத்ஸங்க ஹாலில் நடைபெற்றது. காருண்ய ஹுஸுர் அவர்கள் காலை ஸத்ஸங்கம் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒரு சிறிய சொற்பொழிவு ஆற்றினார்கள். காலை ஸத்ஸங்கம் மற்றும் வயல் வேலைக்குப் பிறகு ஜிஞ்ஞாஸு பெண்கள் மற்றும் 15 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர் மற்றும் ஸுப்பர்மேன் ஸ்கீமில் உள்ள குழந்தைகள் தங்களது தாய்மார்களுடன் காலை 9.00 மணியிலிருந்து 10.30 மணி வரையில் பாவன் ஸ்மிரித்யாலயாவின் பொதுப் பகுதிகளைச் சென்று பார்த்தனர். ஜிஞ்ஞாஸு ஆண்கள் மற்றும் 15 வயதிற்கு மேற்பட்டவர்கள், ஸுப்பர்மேன் குழந்தைகள் தங்களுடைய தந்தையருடன் காலை 10.30 மணியிலிருந்து மதியம் 12.00 மணிவரையில் பாவன் ஸ்மிரித்யாலயாவின் பொதுப் பகுதிகளைச் சென்று பார்த்தனர். காலை 10.30 மணியிலிருந்து தேஜ்புஞ்ஜில் உபதேசம் வழங்கப்பட்டது. எல்லா மாணவர்களும் தயாள்பாகின் வளர்ச்சியைப் பற்றிய நிலையான பொருட்காட்சியைப் பிற்பகல் 1.00 மணியிலிருந்து 3.00 மணிவரையில் சென்று பார்த்தனர்.

அனுமதிக்கப்பட்ட பிராந்தியங்களின் உபதேசம் பெற்ற ஸத்ஸங்கிகள் மற்றும் விசேஷ அனுமதி பெற்று பண்டாராவில் கலந்து கொள்ள தயாள்பாக் வந்திருந்தவர்கள் காலை 10.00 மணியிலிருந்து பிற்பகல் 1.00 மணி வரை கரஸ்பான்டென்ஸ் ஹாலில் ஹுஸுர் ராதாஸ்வாமி தயாளரின் பாத கமலங்களில் காணிக்கை செலுத்தினர். தயாள்பாக் வர இயலாத அனுமதிக்கப்பட்ட பிராந்தியங்களின் உபதேசம் பெற்ற ஸத்ஸங்கிகள் (வெளிநாட்டு பிராந்தியங்கள் தவிர்த்து) அவர்களது கிளைகளிலேயே கிளை வங்கி கணக்குகளில் NEFT/RTGS மூலமாக காணிக்கைத் தொகைகளை செலுத்த அனுமதிக்கப்பட்டனர். வெளிநாட்டு பிராந்தியங்களின் உபதேசம் பெற்ற தகுதியான ஸத்ஸங்கிகள் கோவிட் கட்டுப்பாடு காரணமாக தயாள்பாக் பண்டாராவிற்கு வந்து கலந்து கொள்ள இயலாதவர்கள் தங்களது பிராந்திய அஸோஷியேஷன்கள் வங்கிக் கணக்குகளில் காணிக்கையை செலுத்த அனுமதிக்கப்பட்டனர். கீழ்க்கண்டவாறு 2020-21 க்கான காணிக்கை அளவு வரையறுக்கப்பட்டது.

இந்தியாவின் ஸத்ஸங்க கிளைகளில் பதிவு செய்யப்பட்ட உபதேசம் பெற்ற ஸத்ஸங்கிகள் குறைந்தது ரூ.10 லிருந்து ரூ.2000 வரை, 10ன் மடங்குகளில் செலுத்த அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

வெளிநாட்டு ஸத்ஸங்க கிளைகளில் பதிவு செய்யப்பட்ட உபதேசம் பெற்ற ஸத்ஸங்கிகள் குறைந்தது ரூ.100 லிருந்து ரூ.5000 வரை 100ன் மடங்குகளில் செலுத்த அனுமதி அளிப்பட்டிருந்தது.

தயாள்பாகில் காணிக்கை செலுத்திய ஸத்ஸங்கிகள் கோவிட் -19 பெருந்தொற்றின் காரணமாக ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை கண்டிப்பாக பின்பற்றினார்கள். மாலை ஸத்ஸங்கமானது டானரி அருகே வயல்களில் வயல்வேலையின் போது மாலை 3.45 மணிக்கு நடைபெற்றுது.

பரம புருஷ பூரன தனி ஸ்வாமிஜி மஹாராஜரது பண்டாரா தயாளரின் திருத்தோட்டத்தில் முதன்மை வாய்ந்த ஹுஸுர் ராதாஸ்வாமி தயாளரின் அருள் மற்றும் கருணையினால் வெற்றிகரமாக கொண்டாடப்பட்டது. எல்லா ஸத்ஸங்கிகளும் புனித நிகழ்ச்சியின் ஸத்ஸங்கம் மற்றும் ஸேவையில் பங்கேற்பதற்கான வாய்ப்பினை அருளியதற்காக அன்னாரின் பாத கமலங்களில் தமது பணிவான நன்றிகளைச் செலுத்தினர்கள்.

# பண்டாரா அறிவிப்பு (BHANDARA NOTICE)

## பரமகுரு ஹுஸுர் மஹாராஜ் அவர்களது பண்டாரா

(கோவிட்-19 காரணமாக உள்ள கட்டுப்பாடுகளுக்குட்பட்டு பண்டாரா கொண்டாட்டம் தொடர்பான அறிவுரைகள்)

பரமகுரு ஹுஸுர் மஹாராஜ் அவர்களது பண்டாரா இந்தியா மற்றும் வெளிநாடுகளிலுள்ள பல்வேறு கிளைகளில் 2020 டிசம்பர் மாதம் 20 ம் தேதி ஞாயிற்றுக் கிழமை மதியம் வீடியோ மூலம் கொண்டாடப்படும். பண்டாரா வாரம் தயாள்பாகில் 18-12-2020 முதல் 23-12-2020 வரை கொண்டாடப்படும்.

1) முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, எல்லா ஸத்ஸங்கிகளும் இந்த டிசம்பர் (2020) பண்டாராவைத் தத்தமது கிளைகளிலேயே / ஸத்ஸங்க மையங்களிலேயே / க்ரூப் ஸத்ஸங்கத்திலேயே / மத்திய / மாநில / உள்ளாட்சி அமைப்புகளின் நெறிமுறைகளுக்குட்பட்டு கொண்டாட வேண்டும். இதற்காக தயாள்பாகிற்கு பயணம் மேற்கொள்ள கூடாது. பண்டாரா நிகழ்ச்சிகள் (தற்போதுள்ள வழிகாட்டுதல்களின்படி) ஆடியோ / வீடியோ மூலமாக ஒளிபரப்பப்படும்.

2) மத்திய அரசு / மாநில அரசு / உள்ளாட்சி அமைப்புகளின் உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டு, ஊரடங்கு தளர்வு சம்பந்தமான நெறிமுறைகளை (மாஸ்க் அணிதல், சமூக இடைவெளி, சானிடைசர் உபயோகம்) கடைப்பிடித்து, (ஆடியோ மட்டுமாக இருந்தாலும்) தத்தம் வீடுகளிலேயே பண்டாரா கொண்டாடி e-ஸத்ஸங்கத்தின் வரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

3) அ) ஸத்ஸங்கிகள் வருகையினை நெறிப்படுத்தும் பொருட்டு, நல்ல திடகாத்திரமான ஆண் ஸத்ஸங்கிகள் / ஜிஞ்ஞாஸுக்கள் (கட்டுப்பாடு ஏதும் விதிக்கப்படாத பகுதிகளில் உள்ளோர்) மட்டுமே, அவரவர் பிராந்தியத் தலைவரின் பரிந்துரை மற்றும் ஸபா செயலாளரது அனுமதியுடன் தயாள்பாகில் வயல் ஸேவையில் கலந்து கொண்டு வயல்களில் அமைக்கப்படும் பாதுகாப்பு முகாம்களில் தங்கிக் கொள்ளலாம். அவ்வாறு வருபவர்கள் மத்திய/மாநில அரசுகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நெறிமுறைகளுக்கு உட்பட்டிருத்தல் அவசியம்.

ஆ) பண்டாராவிற்கு வருபவர்கள் பொது போக்குவரத்தை ( பஸ், ரயில் மற்றும் விமானம்) தவிர்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுவதோடு முறையாக சுத்தம் செய்யப்பட்ட தனியார் காரில் வரக்கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதனை மீறி வருபவர்கள் தயாள்பாக்கிற்கு வெளியே தனிமைப்படுத்தப்படுவார்கள்

இ) அவர்கள் முதலில் ஸரன் ஆசிரம ஆஸ்பத்திரியில் உள்ள டாக்டர்.S.K.ஸத்ஸங்கி (மருத்துவ அலுவலர்) யிடம் பரிசோதனைக்குட்பட்டு, தகுதிச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். உடல் நலம் குன்றியவர்கள், ஸேவைக்காக தயாள்பாக் வரக்கூடாது.

4) டிசம்பர் 2020 பண்டாராவிற்கு அனுமதிக்கப்பட்ட டெல்லி, மஹாராஷ்டிரா மற்றும் குஜராத் ராதாஸ்வாமி ஸத்ஸங்க அஸோஸியேஷன் மற்றும் சிம்லா மாவட்டம் மற்றும் ஆஸ்திரேலியா டி.ஆர்.எஸ் அஸோஷியேஸன்களை சேர்ந்தோர் இந்த பண்டாராவில் கலந்து கொள்ளலாம். தயாள்பாக் வாசிகள், முழுநேர/பகுதிநேரத் தொண்டர்கள், ஸபா/சொஸைட்டி ஊழியர்கள், தத்தம் துணைவியர், பிள்ளைகளுடன் தயாள்பாகில் பண்டாரா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம்.

5) இந்த சமயத்தில் தயாள்பாகில் பொருட்காட்சி நடைபெறாது.

6) தயாள் பண்டாரில் தினசரி சாப்பிடுகிறவர்கள் மற்றும் ஏற்கனவே தயாள்பாக் வந்தடைந்த ஸத்ஸங்கிகள்/ ஜிஞ்ஞாஸுக்கள் தவிர வேறு தயாள்பாக் வாசிகளுக்கும் பண்டாராவிற்கான பண்டாரா போஜனம் வழங்கப்படாது. அவர்கள் தத்தம் வீடுகளிலேயே பண்டாரா போஜனத்தை தயாரித்துக் கொள்ள வேண்டும்.

7) உபதேசம் பெற்ற ஸத்ஸங்கிகள் டிசம்பர் 21 திங்கள் கிழமையன்று காணிக்கை செலுத்தலாம். 2020-2021 க்கான காணிக்கையின் அளவு:-

(அ) இந்தியாவிலுள்ள கிளைகளில் பதிவு செய்துள்ள உபதேசம் பெற்ற ஸத்ஸங்கிகள் குறைந்தது ரூ.10/= முதல் அதிகபட்சம் ரூ.2000/= வரை 10 ன் மடங்குகளில் செலுத்தலாம்.

(ஆ) வெளிநாடுகளிலுள்ள கிளைகளில் பதிவு செய்துள்ள உபதேசம் பெற்ற ஸத்ஸங்கிகள் ரூ.100/= முதல் ரூ.5000/= வரை 100 ன் மடங்குகளில் வங்கிக் கணக்கு மூலம் அவர்களது பிராந்திய அஸோஸியேஷனில் செலுத்தலாம்.

மேலே பத்தி - 3 மற்றும் 4ல் குறிப்பிட்டுள்ளபடி, தயாள்பாக் வர அனுமதிக்கப்படும் ஸத்ஸங்கிகள் உரிய சமூக இடைவெளியுடன் காணிக்கை செலுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

எனினும், அனுமதிக்கப்பட்ட பிராந்தியங்களிலிலிருந்து தயாள்பாகிற்கு வராத ஸத்ஸங்கிகள் (வெளிநாடுகள் தவிர) ONLINE மூலமாக (NEFT/RTGS) தத்தம் கிளை ஸத்ஸங்கத்தின் வங்கிக் கணக்கில் (கிளைச் செயலாளர் மற்றும் 2 ஸத்ஸங்கிகளால் பராமரிக்கப்படுவது) செலுத்தலாம். அவ்வாறு வங்கிக் கணக்கில் செலுத்த இயலாத பட்சத்தில், கிளைச் செயலாளரிடம் ரொக்கமாகச் செலுத்தலாம். கிளைச் செயலாளர் இவ்வாறு செலுத்தப்படும் காணிக்கைத் தொகைகளை ஒன்று சேர்த்து ஒரே தடவையில் (SINGLE REMITTANCE) ஸபாவின் வங்கிக்கணக்கில் NEFT/RTGS மூலமாகச் செலுத்த வேண்டும். அத்துடன் செலுத்தப்படும் தொகைக்குரிய ஸத்ஸங்கிகளின் பெயர் விபரப்பட்டியலை FORM-A வடிவில் ஸபாவிற்கு அனுப்ப வேண்டும். இதற்காக, ஸபாவின் வங்கிக் கணக்கு விவரம் பிராந்தியத் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (இது சம்பந்தமான மேல் விவரங்கள் தனியாக அனுப்பப்படும்).

வெளிநாட்டிலுள்ள இந்த பண்டாராவிற்கு வர தகுதியான உபதேசம் பெற்ற சத்சங்கிகள் கோவிட்-19 கட்டுபாடுகள் காரணமாக வர இயலாதவர்கள் தங்களது காணிக்கைத் தொகையினை அவர்களுக்குரிய பிராந்திய அஸோஷியேஷன் வங்கிக் கணக்கிற்கு அனுப்பலாம். கிளை செயலாளர்கள் அனுப்பிய காணிக்கைப் பட்டியலை பிராந்தியத் தலைவர் சரிபார்த்தபிறகு அந்தத் தொகையினை அனுமதிக்கலாம்

8) அ) டிசம்பர் (2020) பண்டாரா சமயத்தில், அனுமதிக்கப்பட்ட பிராந்தியங்களிலிருந்து வயல் ஸேவைக்கு வருகின்ற ஆண் ஜிஞ்ஞாஸுக்களுக்கு (பத்தி – 3 ல் குறிப்பிட்ட நிபந்தனைப்படி) உபதேசம் வழங்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும். மற்ற ஜிஞ்ஞாஸுக்களுக்கு அடுத்து வருகின்ற ஏதேனும் பண்டாராவின் போது பரிசீலிக்கப்படும்.

ஆ) இரண்டாம் உபதேசம் (பஜன் - உபதேசம்/ ரிவிஷன்) தயாள்பாக்கிலிருந்து வீடியோ கான்ஃபிரன்சிங் முறையில் அளிக்கப்படுகிறது என்பதை நினைவில் கொள்க. கிளை செயலாளர்கள் உபதேச விண்ணப்பம் தொடர்பாக படிவங்களை ஒரு மாதத்திற்கு முன்பே தயாள்பாக் ஸபா உபதேசப்பிரிவிற்கு அனுப்புவதை உறுதி செய்து கொள்ளுங்கள்

9) இவ்வாறு அனுமதிக்கப்படும் ஸத்ஸங்கிகள் /ஜிஞ்ஞாஸுக்களுக்கு புனித நூல்கள் மற்றும் ச்யவனபிராஷ் விநியோகம் உரிய வழிகாட்டுதலின்படி ஏற்பாடு செய்யப்படும்.

10) பண்டாராவிற்காகவும், வயல் ஸேவைக்காகவும் தயாள்பாக் வருகின்ற ஸத்ஸங்கிகள் மாஸ்க், ஹெல்மட் மற்றும் கையுறை அணிதல், கைகளை அடிக்கடி சோப்பினால் கழுவுதல், சமூக இடைவெளியைப் பின்பற்றல் ஆகிய நடைமுறைகளைத் தவறாது செய்து வர வேண்டும்.

| நிகழ்ச்சி நிரல் | | | |
|---|---|---|---|
| பொது நிகழ்ச்சி<br>(18.12.2020, 19.12.2020. 21.12.2020 & 22.12.2020) | | பண்டாரா நாள் நிகழ்ச்சி<br>ஞாயிற்றுக் கிழமை (20.12.2020) | |
| காலை ஸத்ஸங்கம் மற்றும் வயல்வேலை | 03.45 **a.m** | ஆரத்தி மற்றும் வயல் வேலை | 03.45 **a.m** |
| உபதேசம் | 12.30 **p.m** | பண்டாரா மற்றும் வயல் வேலை | வழிகாட்டுதல்படி |
| மாலை ஸத்ஸங்கம் மற்றும் வயல் வேலை | 03.45 **p.m** | மாலை ஸத்ஸங்கம் மற்றும் வயல் வேலை | 03.45 **p.m** |

| நாள், கிழமை<br>நேரம் | ஸபா கூட்டம் | பாவன் ஸ்மிரித்யாலயாவில் புனிதப்பகுதி மற்றும் பொதுப்பகுதிகளில் மரியாதை செலுத்துதல்<br>**9.00 am to 12.00 noon** | காணிக்கை செலுத்துதல்<br>**10.00 am to 01.00 pm** | ஜோனல் ஸத்ஸங்கம் (வீடியோ) |
|---|---|---|---|---|
| 18.12.2020<br>(வெள்ளிக் கிழமை) | | புனிதப் பகுதி மற்றும் பொதுப்பகுதி உபதேசம் பெற்ற ஆண்கள் | | |
| 19.12.2020<br>(சனிக் கிழமை) | வழிகாட்டுதலின் படி | புனிதப் பகுதி மற்றும் பொதுப்பகுதி உபதேசம் பெற்ற பெண்கள் | | |
| 20.12.2020<br>(ஞாயிற்றுக் கிழமை) | **பண்டாரா நாள்** | | | |
| 21.12.2020<br>(திங்கள் கிழமை) | | பொதுப்பகுதி<br>(9.00 am to 10.30 am)<br>அ) ஜிஞ்ஞாஸு பெண்கள் 15 வயதிற்குட்பட்ட சிறுவர் மற்றும் சிறுமியர், ஸுப்பர்மேன் குழந்தைகள் தங்கள் தாயாருடன்<br>(10.30 am to 12.00 noon)<br>ஆ) ஜிஞ்ஞாஸு ஆண்கள் 15 வயதிற்குட்பட்ட சிறுவர் மற்றும் சிறுமியர், ஸுப்பர்மேன் குழந்தைகள் தங்கள் தகப்பனாருடன் | அனுமதிக்கப்பட்ட பிராந்தியத்தின் ஸத்ஸங்கிகள் காணிக்கை / ஆன்லைன் காணிக்கை செலுத்துதல் | |
| 22.12.2020<br>(செவ்வாய்க் கிழமை) | | | | வழிகாட்டுதலின் படி |

தமிழ் பிரேம் பிரசாரக்

| 23-12-2020 (புதன் கிழமை) | ஸத்ஸங்கிகள் ஊர் திரும்புதல் |
|---|---|

தேவைக்கேற்ப - உபதேச விண்ணப்பதாரர்கள் (ஜிஞ்ஞாஸுக்கள்) உபதேசத்தின் பொருட்டு ஸபா செயலாளரது அனுமதியுடன் கூடுதல் நாட்கள் தங்கலாம் (உபதேச விண்ணப்பதாரர்கள் குறைந்தபட்சம் 4 நாட்கள் வயல் ஸேவை செய்தல் அவசியம். )

தயாள்பாக், ஆக்ரா (ஜி.பி.ஸத்ஸங்கி)
நாள் : 29.10.2020 செயலாளர்

R.S
**தயாள்பாக் சேவை மற்றும் பயிற்சி சங்கம்**
**தயாள்பாக், ஆக்ரா – 282 005**

ஜி.எஸ்.டி.ஐ.என் : **09AAATT7403J1ZA**
சூட்கேஸ், டிராவல் பேக், கைப்பை, மற்றும் ஸ்கூல் பேக் தயாரிப்பாளர்கள்.
தயாள்பாக் பொருள்களைப் பயன்படுத்துங்கள்.
கை பேசி: **+91 8192947980**
மெயில் ஐடி: stsdayalbagh@gmail.com

**R.S.**
**ராதாஸ்வாமி நகர கூட்டுறவு வங்கி லிட்**
**தயாள்பாக், ஆக்ரா – 5**

பண்டாராவிற்கு வரும் யாத்திரீகர்களின் சௌகரியத்தின் பொருட்டு, பல்வேறு வசதிகள் அளிக்கப்படும்.

R.S.
**அணிவதற்கு சொகுசானவை**
**தயாள் பனியன்கள்**
திருப்பூர் ஸத்ஸங்க சமூக நலச் சங்கம்
மேலத்திருவேங்கடநாதபுரம்
திருநெல்வேலி

**R.S**
**தயாள் ரப்பர் செருப்புகள்**

சொகுசானவை, நீடித்துழைப்பவை
SIS Ltd, KAKINADA

R.S.
**தயாள்பாகிலுள்ள (ஆக்ரா) எங்களது ஷோரூமில் உயர்ந்த தரம் வாய்ந்த தயாள்பாக் பொருட்கள் விற்பனைக்குத் தயாராக உள்ளன.**
**உடன் விஜயம் செய்யுங்கள்.**
பொது மேலாளர்
ஸத்ஸங்கிகள் நலச் சங்கம்
தயாள்பாக், ஆக்ரா

Proprietor : Dayalbagh Press & Publications (Pvt.) Ltd.Published by Shri Prem Dayal Bhatnagar from the office of Tamil Prem Pracharak and printed by Shri Prem Dayal Bhatnagar at Dayalbagh Press, Dayalbagh, Agra – 282005. Editor: Shri S.Jeyaram Singh, BA, HDC.